**முலடியன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 18 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முலடியன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டு ஏலத்தில் விற்கப்பட்ட கிரயம் ரூபா 2,380,000 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக செம்மையாக்கல் செய்து கணக்குகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய கட்டிட நிர்மாணத்திற்கு சபை நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 10,180,322 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,209,603 ஆன பங்களிப்பு பணம் தொடர்பாக கணக்குகளில் ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 2,229,790 ஆன முத்திரைக் கட்டணம் ஆண்டில் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய கீதி மன்ற தண்ட வருமானம் ரூபா 445,984 வும் நிலையான வைப்பு ரூபா 174,352 அதிகரித்தும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 81,200 குறைத்தும் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதன் தொடர்பான துணைப் பதிவேடு/பட்டோலைகளின் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையில் கூட்டுத்தொகை ரூபா 11,397,835 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

## 1.3.4 தொங்கல் கணக்குகள்

2013 ஆண்டு முதல் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படும் ரூபா 36,289 ஆன தொங்கல் கணக்கு செலவு மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டுகலிளிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 3,251,893 ஆன முற்பணக் கணக்கின் மீதியும், நிலையான வைப்பு வட்டி கணக்கின் மிதி ரூபா 900,196 வும், ரூபா 7,290 ஆன காணாமல்போன பணமும், ரூபா 7,365 ஆன பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் ரூபா 112,296 ஆன 5 சதவீத நிலையான கட்டண மீதியும், 2014 வருடம் முதல் முன்கொண்டுவரப்படும் நிலுவையான வருமான மீதியினுல் உள்ளடங்கப்பட்டுள்ள ரூபா 30,335,734 வும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 19,754,624 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடு, உரித்துரிமையும், வருடாந்த பண்டகக் கணிப்பீடு அறிக்கையும் பட்டோலையும், கூட்டுத்தொகை 46,041,095 ஆன 3 சொத்துக்கள் பந்திகள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடும், வருடாந்த பண்டகக் கணிப்பீடு அறிக்கையும், ரூபா 3,317,919 ஆன முற்பணம் தொடர்பான பதிவேடும் பட்டோலையும், ரூபா 53,263,909 ஆன நிலுவையான ஏனைய வருமானம் தொடர்பான விரிவான பட்டோலையும், மீதிகள் உறுதிப்படுத்தலும் கடன்பட்டோர் பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 20,535,208 ஆன கடன்கொடுத்தோர் தொடர்பான பட்டோலையும், மீதிகள் உறுதிப்படுத்தலும் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்பிக்கப்படாமைனால் கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது.

## 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மை |
|---|---|
| **(அ)** 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீத வரி செலுத்துவதை புறக்கணித்த நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்து தடை செய்யும் உத்தரவு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவினம், மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,430,062 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,851,738 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,578,324 ஆன வளர்ச்சி காணப்பட்டது

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 44,377,383 | 26,720,460 | 17,656,923 | 30,947,321 | (13,290,398) |
| 2014 | 34,793,334 | 20,527,943 | 14,265,391 | 25,941,595 | (11,676,204) |
| 2013 | 27,163,150 | 11,283,100 | 15,880,050 | 19,937,898 | (4,057,848) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் சபையின் வருமான உதவிகளில் போன்று, முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானத்தில வளர்ச்சி காணப்பட்டது.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து கனிசமான பெருமானத்தில் அதிகரித்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்திற்கு மேலாக மூன்று வருடங்களிலும் கனிசமான பெருமானத்தில் மீண்டுவரும் செலவு நிலவியதுடன், வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 7,100,968 ஆன மூலதன உதவி அளவினை விஞ்சி ரூபா 10,278,436 ஆன மூலதன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

----------------------------------

#### 2.3.1 ஏக்கர் வரி

-------------------

ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 157,586 மற்றும் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் ரூபா 21,648 உடன் ரூபா 179,234 அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆரம்ப நிலுவை மீதிகளின் 7

சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 63 சதவீதம் அறவிடப்பட்டிருந்த போதிலும் நிலுவை வருமானத்தை அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வாடகை**

ஆரம்ப நிலுவையான ரூபா 461,630 மீதி மற்றும் ரூபா 2,956,300 ஆன ஆண்டில் பற்றுச்சீட்டிடலோடு ரூபா 3,417,930 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், ஆண்டில் பற்றுச்சீட்டிடலின் 95 சதவீதம் மற்றும் நிலுவையின் 25 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.3 கடைஅறை வாடகை**

2008 ஆண்டில் வாடகை ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டிருந்த மாகந்துர பொது வியாபார கட்டிட தொகுதியின் உயர் மாடியில் 06 கடைஅறைகள் 2013 ஆண்டில் மீண்டும் சபைக்கு கையேற்கும் வரை ரூபா 224,900 ஆன வாடகைப் பணம் மற்றும் ரூபா 443,500 ஆன சேகரிக்கப்படும் வாடகை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.4 **நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 115,270 மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 8,763,050 பெற வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை மதிப்பீடு**

(அ) பிரதேச சபை வழுவூட்டும் செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆண்டு கிடைத்திருந்த ரூபா 7,000,000 பணத்தில் பயன்படுத்தப்படாத ரூபா 1,423,460 தொகை 2016 மார்ச் மாதம் உள்ளுராட்ச்சி மற்றும் மாகாண சபை அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. உள்ளுராட்ச்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளரின் 2014 மே 05 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட சுற்றுநிருபத்தின் முரனான செயலொன்றிற்காக ரூபா 821,500 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 1,000,000 தொகையை செய்ததற்கான முன்னேற்றத்தை 2015 நவம்பர் மாதம் வரை சமர்ப்பிக்கப்படாததனால் மீதி ரூபா 6,000,000 ஆன பணம் அரச வருமானத்திற்கு செலவு செய்யப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

கடந்த 06 ஆண்டிற்குள் சபை அதிகாரி பிரதேசத்தில் இனங்காணப்பட்ட 73 அனுமதியற்ற நிர்மானங்கள் தொடர்பில் 1987 இன் 45 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126(vii)(உ)(எ) மற்றும் 126(ix) இல் குறிப்பிடப்பட்ட உப யாப்பு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

விஷேட அவசியமின்றி 2016 ஜுலை மாதத்தில் காலம் பூர்தியாக இருந்த ரூபா 2,500,000 ஆன நிலையான வைப்பொன்று 2016 மே 13 திகதி பணமாக்கப்பட்டதனால் கிடைக்கவேண்டியிருந்த ரூபா 177,055 ஆன வட்டி வருமானம் சபைக்கு இல்லாமல் போனது.

**3.4 ஒப்பந்தக் கட்டுப்பாடு**

நகர் எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்ட அலுவலக கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக பக்க மதில் கட்டுவதற்காக 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை ரூபா 6,782,281 ஆன செலவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வேலையின் காலத்தை நீடிக்கும் போது அதற்கு அநுகூலமாகும் பிரகாரம் ரூபா 541,026 ஆன செயலாற்றுகை ஒப்பந்தத்தை கால நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பக்க மதில் மற்றும் பிரதேச சபை கட்டிடம் நிர்மானிக்கும் இடத்திற்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிர்வனத்தால் வழங்கப்பட்ட தகைமை சான்றிதழில் காலவதியாகிருந்தது. அச்சான்றிதழின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைனால் மண் இடித்து விழுந்திருந்ததுடன் நிர்மானிக்கப்படும் கட்டிடத்தின் சிவர் வெடித்ததனால் யன்னல்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) பொறியியல் ஆலோசணைகளுக்கு இணங்காத வகையில் மண் வெட்டப்பட்டதன் காரணமாக ரூபா 50 மில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்ட கட்டிடம் அபாயத்திற்குள்ளாகி இருந்தது.

**3.5 கழிவுப் பொருள் முகாமை**

கழிவு பொருட்கள் முகாமை தொடர்பாக உப யாப்பை நிறைவேற்றிக் கொள்ள அல்லது சுற்றாடல் அதிகாரப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லாததுடன், அதிகார பிரதேசத்தினுள்ளான 10 கைத்தொழிற்சாலைகளிருந்து வெளியிடப்படும் குப்பைகளிற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பாரக்கப்பட்ட வருமானம் ரூபா 735,729 மற்றும் 08 செலவின விடயங்களின் ரூபா 142,193,872 ஆன சேமிப்பும், ஆனமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படாத சொத்துக்கள்**

பொது நிருவாகம், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் ஜனனாயக ஆட்ச்சி தொடர்பான அமைச்சினூடாக 2015 ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,697,142 பெறுமதியான 104 டொன் அதிர்வு உருளையை எவ்வித ஆக்கப்பூர்வ நடவடிக்கைக்கும் பயன்படுத்தாது சபைக்கு சொந்தமான இயற்கை பசலை கொட்டிலில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.
(இ) வருமான நிருவாகம்.
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்.